இனிமையான குழந்தைகளே ! சேவைக்கான புதுப்புது கண்டு பிடிப்புகளை வெளியே கொண்டு வாருங்கள், சேவையை விரிவு படுத்துங்கள், சேவைக்களத்தில் தாய்மார்களை முன் வைப்பதே வெற்றிக்கான சாதனமாகும்

கேள்வி: எந்த நற்பழக்கத்துடன் பேசினால் ஆதாரத்துடன் வலியுறுத்தி பேச்சை நிரூபிக்க முடியும்?

பதில்: எவரேனும் பெரியவர்களுடன் பேசினீர்கள் என்றால், நீங்கள்.... நீங்கள் என்று கூறி பேச வேண்டும். நீ...நீ... எனப்பேசக்கூடாது. இதுவும் கூட நற்பழக்கமாகும். உங்களது ஆதார அதிகாரத் துடன் பேசுங்கள், ஆனால் நிச்சயம் மரியாதையுடன் பேச வேண்டும். பள்ளிகளில் இந்த நற்பழக்கமும் கற்றுத் தரப்படுகின்றன.

(2) ஒரு போதும் அகங்காரத்துடன் பேசக்கூடாது. ஞான போதையில் சதா புன்சிரிப்புடன் இருங்கள். மலர்ந்த முகம் கூட சேவை புரிகிறது.

பாடல்: இன்றைய இந்த மனிதன்.....

ஓம் சாந்தி நிறைய பாவ ஆத்மாக்கள் ஆகிவிட்டனர் என இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்குப் புரிய வைக்கப்படுகிறது. பாவம் மிக அதிகமாய் வளர்ந்து விட்டது என நல்ல குழந்தைகள் கூப்பிடு கின்றனர். பாவத்தின் மூலமாகத்தான் மனிதர்கள் பதீதமாகின்றார்கள். பாவ ஆத்மாக்களைப் புண்ணிய ஆத்மா ஆக்குவதற்கு பதீத பாவனரே! வாருங்கள் என நினைவு செய்கின்றனர். இது பதீதமான உலகம் என்றால், நிச்சயம் பாவனமான இன்னொரு உலகமும் உள்ளது! நிராகார உலகத்திற்கு பாவன உலகம் என கூறப்படுவதில்லை. அது சாந்தி தாமம். பதீத மற்றும் பாவன உலகம் மனிதர்களுக்கானது. க-யுக உலகம் பதீதமாக உள்ளது. சத்யுக உலகத்தில் பாவனம் (தூய்மை) உள்ளது. பதீத பாவனர் தந்தையே பாவன உலகை உருவாக்கு கிறார். வித்வான், பண்டிதர்கள், சாஸ்திரங்களைப் படைத்துள்ளனர். ஆனால் வியாசருடைய பெயரை வைத்து விட்டனர். வியாக்ஞானம் (விளக்கம்) சொல்பவரின் பெயர் கூட வேண்டு மல்லவா? சாஸ்திரங்கள் எப்போது எழுதப்பட்டன என்று மனிதர்கள் அறிவதில்லை. சத்தியுகம், திரேதாயுகத்தில் சாஸ்திரங்கள் கிடையாது என குழந்தைகளாகிய நீங்களே அறிவீர்கள். பக்தி மார்க்கத்தின் எந்த ஒரு அடையாளமும் அங்கு கிடையாது. பாபா ஞானத்தின் வாயிலாக வாழ வைக்கிறார். ஞானத்தின் மூலம் 21 பிறவிகளுக்கு நீடுழி வாழ்க! என ஆகிறீர்கள். பிறகு மாயை வந்து விழச் செய்கிறது. இது (இறந்து) ஒழிந்தவர்களின் உலகம். சுடுகாடு, என்றழைக்கப் படுகிறது. இச்சமயத்தை கடுமையான சுடுகாடு என்போம்.

அனைவரின் புத்தியானது செயல்படத்தான் செய்யும். மகாபாரத யுத்தத்தில் முழு சுடுகாடு ஆகிவிடுகிறது. வேறு யுத்தங்களில் இவ்வாறு ஆவதில்லை. ஞானக்கடலின் அனைத்து குழந்தைகளும் மயான பூமியினராகி விட்டனர், என்று பாகவதத்தில் எழுதப்பட்டுள்ளது. மாயை அனைவரையும் காமச் சிதையில் அமரவைத்து எரித்து சாம்பலாக்கி விட்டது. அனைத்தும் சுடுகாடு! முஸ்லீம்களின் குரானிலும் கூட சமாதி ஆகிவிடுகின்றனர் என்று

கூறப்பட்டுள்ளது. நியாயத் தீர்ப்பு வழங்கும் (கயாமத்) தினத்தன்று அவர்களை எழுப்ப அல்லாஹ் வருகிறார். சுடுகாட்டினை, சொர்க்கமாக மாற்றுகின்றார். பிர்லா கோவிலிலும் (டில்லி) கூட டில்லியை சொர்க்கமாக ஆக்கினேன் என்று எழுதப்பட்டுள்ளது. ஆக நரகத்தைத்தான் சொர்க்கமாக ஆக்கியிருக்க வேண்டும். பிரளயம் ஏற்படாது. ஆனால் அதிகம்பேர் மடிகின்றனர். சத்தியுகத் தில் இருப்பதே ஒரு சில மனிதர்கள் தான். ஒரே ஒரு ஆதி சனாதன தேவி தேவதா தர்மமே உள்ளது. இந்த கீதத்தில் உள்ள மாதிரி நிலை அங்கு இருக்காது. சொர்க்கத்தில் யாரும் யாருக்கும் துக்கம் கொடுப்பதில்லை. இங்கு எவ்வளவு துக்கம் கொடுக்கின்றனர். ஒருவர் மற்றொருவரை கொலை கூட செய்து விடுகின்றனர். பாபாவிடம் செய்திகள் நிறைய வருகின்றன. மற்றொருவர் மனைவியை விரும்பும் ஒருவர் தனது மனைவியை அழித்து விடுகிறார். விஷம் கொடுத்து விடுகின்றனர். இது தான் பழைய அழுக்கான உலகம்! எனவே தான், பதீத பாவனரே, வாருங்கள்! எனப் பாடுகின்றனர். ஆனால் தன்னைப் பதீதமாக உணர்வதே இல்லை. எவரையாவது பார்த்து நீர் பதீதமானவர்! என்று கூறினால் கோபித்துக் கொள்வார். நாமும் பதீதமாய் இருந்தோம், பாபா பாவனமாக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். பதீத உலகை பாவனமாக்குபவர் சிவபாபா என உலகிற்கு நீங்கள் கூறவேண்டும். அவரது பிறந்த நாளையும் நீங்கள் கொண்டாடுகிறீர்கள், அவர் வந்து விட்டார். உண்மையில், ஏதேனும் புதியதைக் கண்டு பிடித்தால் அதை உடன் ராஜாவுக்கு தெரிவிப்பர். அவர் கையிலெடுப்பார். ஆனால் இப்போதோ ராஜாவே இல்லை. இந்த கவனத்தை அனைவருக்கும் கொடுக்க வேண்டும்.. உங்களிடையே ஒன்று கூடி, தீர்மானத்தை நிறைவேற்றி, ஆயிரக்கணக் கானோரிடம் கையெழுத்தை வாங்கி அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும். புதிய கண்டுபிடிப்பை விளம்பரப்படுத்த உயர் அதிகாரமுடையோருக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. பிறகு அரசு அதற்கான ஏற்பாட்டைச் செய்யும். ஆக நீங்களும் அவ்வாறு செய்ய வேண்டும். எவரது பிறந்தநாள் வருகிறதோ, அவர்களுக்கு புரிய வையுங்கள். யாருக்கு எந்த நாளில் அவரது விழா வருகிறதோ அந்நாளில் புரிய வைத்தால் அனைவரும் புரிந்து கொள்வர். விஷயம் சரியாகத்தான் தெரிகிறது. இன்றிலிருந்து 5000 வருடம் ஆண்டுகளுக்கு முன்பு பாபா வந்தார். பாரதம் உயர்ந்ததிலும் உயர்ந்ததாக இருந்தது. தங்கக் குருவியாய் விளங்கிற்று. இப்போது அதுவே சோளி (சிப்பி)க்குச் சமமாகி விட்டது. அதை பரம தந்தை சிவபரமாத்மா வைரத்திற்குச் சமமாக ஆக்குகிறார். பிரம்மாவின் மூலம் இந்த ஞானத்தைத் தந்து கொண்டிருக்கிறார்.

உண்மையில் ஒவ்வொரு மனிதரும் பிரம்மா குமார், குமாரிகள் என நீங்கள் புரிய வைக்க முடியும். புனைப் பெயர் இதுவாகும். பிரம்மாவின் மூலமே பிராமண தர்மத்தின் படைப்பு ஏற்படுகிறது. பிறகு சத்திரிய, வைஷ்ய, சூத்திரர் இப்படி முழு வழித் தோன்றலாகி விடுகிறது. ஆக நீங்கள் இந்த விழாக்களின் மீது நன்கு புரிய வைக்க முடியும். தீபமாலை வருகிறது (தீபாவளி). தற்போது ஒவ்வொரு வீட்டிலும் கடும் இருட்டு, ஞான சூரியன் பிரகாசிக்கும் போது அஞ்ஞான இருள் அகலும். முற்றிலும் சரியான இருட்டு, எந்த ஆத்மாவும் தனது தந்தையை அறியவில்லை. தந்தையை அறிவதன் மூலமே அனைவரது ஜோதியும் ஒளிர்விட்டு எரிகிறது. அது விளக்கு என்றும் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட முக்கிய காலத்தை மிக நன்றாகப் புரிய வைக்க முடியும். அரசாங்கத்திற்கும் புரிய வையுங்கள், நீங்கள் இப்போது முக்கியமாக

முன்னேறிச் செல்ல வேண்டும். தாய்மார்களை முன்னால் வைக்க வேண்டும். இதில் ஆண்கள் வெட்கப்படக்கூடாது. எப்படி பிறரை எழுப்ப வேண்டும் என்று பாபா புரிய வைக்கின்றார். நீங்கள் உங்களுக்குள் ஒன்று பட்டு, கையெழுத்துக்களை வாங்கி, பிறகு புரிய வையுங்கள். நீங்கள் ஒவ்வொரு வரும் உண்மையில் சிவனின் குழந்தைகள். அனைவருமே சிவன் என்பது கிடையாது. பாபா ஒருவரே! அவர் படைப்பவர். பதீதர்களை பாவனமாக்குபவர், அறிக்கை ஒன்றை தயார் செய்ய வேண்டும். முக்கியமானவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். நீங்கள் மனிதர்களை எழுப்புகின்றீர்கள். கங்கையில் குளிப்பதால் தூய்மை அடைவதாக மனிதர்கள் நினைக்கின்றனர். ஆனால் கங்கை பதீத பாவனி அல்ல! பதீத பாவன் ஒரே ஒரு நிராகார மானவர். ஞான மழையைப் பொழியக்கூடிய ஞானக்கடல் அவர். மற்றபடி இவையெல்லாம் குருட்டு நம்பிக்கை. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு அதிகார உரிமை கிடைத்துள்ளது. குமாரிகளின் மூலம் ஞான அம்பு எய்தப்பட்டது என சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. நல்ல நல்ல குழந்தைகள் நன்கு சேவை செய்ய முடியும். சொற்பொழிவாற்ற முடியும். சேனையில் நம்பர் பிரகாரம் தான் உள்ளனர். பேசுவது, உரையாடுவதிலும் நற்பழக்கம் தேவை. தன்னை விட பெரியவர்களை நீங்கள், நீங்கள்... என்றே அழைக்க வேண்டும். ஆனால் படிக்காத குழந்தைகள் நீ... நீ.... என்றே அழைக்கின்றனர். படிப்பின் மூலமாகவும் நல்ல பழக்க வழக்கங்கள் வருகின்றன. டீச்சர்கள் ஒரு சிலர் மிக நல்லவர்களாயிருக்கின்றனர். நன்கு கற்பித்து உயர்ந்த நிலையை அடைவதற்கு லாயக்காக ஆக்குகின்றனர். (மாணவர்களின்) ஒழுக்கம் பற்றியும் பதிவேட்டில் எழுதுகின்றனர். இன்னாட்களில் அந்தளவு ஒழுக்கமானவர்கள் இல்லை, உலகம் அழுக்கிலும் அழுக்காக உள்ளது. எந்த நிலையாகி விட்டது என பாட்டிலும் கேட்டீர்கள் அல்லவா? இதை நமது பாரதம் என்று யார் சொல்வார்? என்பதை குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள். பாரதம் சொர்க்கமாக இருந்தது. இது அனைத்தும் உங்கள் கற்பனை என சந்நியாசி கள் சொல்லி வருகின்றனர். சொர்க்கம் எப்படியிருக்கும் என அவர்கள் எப்படி அறிவார்கள்? ஆம், ஒரு சிலர் இதைப் பார்த்துவிட்டு (படங்கள்) குஷி அடைவார்கள், வருவார்கள். இந்த படங்கள் மிக அருமையானது. பாண்டவர்களின் பெரும் பெரும் சிலைகளை உருவாக்கு கின்றார்கள். இவ்வளவு பெரியதாய் யாரேனும் இருந்தார்களா என்ன? இராவணனை எவ்வளவு பெரியதாய், 100 அடி அளவு உயரத்திற்கு செய்கின்றனர். ஒவ்வொரு நாளும் (ஆண்டும்) பெரிதாக்கிக் கொண்டே போகின்றார் கள். இராவணனின் ஆயுள் அதிகமாகி விட்டது. வந்து 2500 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆக நீங்கள் தசரா நாட்களிலும் கூட நல்ல முறையில் விளக்கிக் கூறமுடியும். இது இராவணனின் இராஜாங்கம். இது அரக்க உலகம் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் இதை அசுர இராஜ்யம் என்று ஏன் சொல்கிறீர்கள் என்று யாரேனும் கேட்டால் அவர் (முக்கிய நபர்) கூட இராவண இராஜ்யம் என்று செய்தித்தாளில் கூறியுள்ளார்கள் என்று கூறுங்கள். பாபா கூட வந்தபோது இது அசுர உலகம் என்று கூறினார். தெய்வீக இராஜ்யம் சத்யுகத்தில் தான் ஏற்படும். இந்த மாதிரி ஒன்றாகக் கூடி புதுப்புது வழிகளைக் காண வேண்டும்.

நோக்கமும் லட்சியமும் தெளிவாக உள்ளது. வெளியே பெயர்ப் பலகையிலும் நோக்கம் எழுதப் பட்டுள்ளது. எந்த பள்ளியிலும் குருட்டு நம்பிக்கை என்ற விஷயமே இருக்காது. சத்சங்கங்களில் வேதம் முதலியவைகளை

எப்போதிலிருந்து படித்து வருகிறீர்கள்? என்று பாபா இப்போது கேட்கின்றார். சத்யுகத்திலிருந்து என்று சொல்ல மாட்டீர்கள். அங்கு பக்தியின் கலாச்சாரம் (வழிமுறை) என்று கூறப்படுகிறது. அரை கல்பம் பிரம்மாவின் இரவு - பக்தி மார்க்கம் ஆரம்பமாகிறது., பகவான் நிச்சயம் வருகிறார், எனவே தான் சிவஜெயந்தி கொண்டாடப் படுகிறது. இல்லையெனில், நிராகாரமானவர் எப்படி வந்தார்? நிச்சயமாக சரீரத்தை ஆதாரமாக எடுத்திருக்க வேண்டும். பரம தந்தை பிரம்மாவின் உடலைத்தான் ஆதாரமாக எடுக்கிறார். அவர் வருவதே பாரதத்தில் தான். பாபா விராட ரூபம் பற்றியும் விளக்கியுள்ளார். இந்த பிராமண தர்மம் குடுமியைப் போன்று உயர்வானது. இப்போது நடைமுறையில் நீங்கள் இருக்கிறீர்கள். பிராமணர்களாகிய நமக்கு மேல் சிவபாபா நிராகாரமாக உள்ளார். பிறகு பிரம்மாவின் சரீரத்தைக் காண்பிக்க வேண்டும். இந்த சரஸ்வதி, மேலும் இந்த பிராமண குலம், பிறகு தேவதா குலம், க்ஷத்திரிய குலம். இவ்வளவு இவ்வளவு பிறவிகள் எடுக்கின்றனர். முற்றிலும் தெளிவாக மிகச் சரியாக நடக்க முடியும். பிரம்மாவின் இரவு, சரஸ்வதியின் இரவு, பிரம்மா வம்சத்தினருக் கும் இரவு! பகலில் அனைவரும் பிராமணரிலிருந்து தேவதை ஆகின்றனர். கருத்துக்கள் என்னமோ குழந்தைகளுக்கு நிறைய தரப்படுகிறது. தாரணை செய்ய வேண்டும். ஒரு காதில் கேட்டோம், இன்னொரு காதின் வழி விட்டுவிட்டோம், வெளியே போனவுடன் அனைத்தும் மறந்து விட்டது அப்படி கிடையாது. எப்படி பிற சத்சங்கங்களில் கதை முதலியவைகளைக் கேட்டு, பிறகு சென்று (மறந்து) விடுகின்றனர். அப்படியல்ல! இங்கு உங்களுக்கு பலன் வெளிப் படையாகக் கிடைக்கிறது. இந்த படிப்பின் மூலம் நீங்கள் மனிதரிலிருந்து தேவதையாக வேண்டும். அங்கு எவ்வித லட்சியமும் நோக்கமும் கிடையாது. பாபா என்னமோ நிறைய புரிய வைக்கின்றார், ஆனால் யாரோ ஒருவர் தான் வருகிறார்கள். ஒரு சிலரோ துரோகிகளாய்க் கூட ஆகிவிடுகின்றனர். புரிய வைக்க வேண்டும்.... இது யுத்த மைதானம். மாயா மிகவும் பலமானது. சிலர் இதில் தோல்வி அடைந்து விடுகின்றனர். இதுவும் நாடகத்தின் விளையாட்டாகும். அனைவரும் வெற்றியடைய முடியுமா என்ன? நாம் மாயா இராவணனால் தோற்கடிக்கப் பட்டுள்ளோம் என்பதை குழந்தைகள் உணர்கின்றனர். வெற்றி தோல்வியின் விளையாட்டு இது. மாயாவினால் தோல்வியே தோல்வி! நாம் பாபாவின் மூலம் உலகின் எஜமானர்கள் ஆகின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த போதை உறுதியாக இருக்க வேண்டும். அந்த போதை ஏன் குறைந்து போகின்றது? உலகப் படைப்பாளரான பாபாவின் மூலம் படித்துக் கொண்டிருக்கிறோம். நரனிலிருந்து (ஆண்) நாராயணராகவும், நாரியிலிருந்து (பெண்) லக்ஷ்மி யாகவும் ஆகிக் கொண்டிருக்கிறோம். மாணவர்கள் படிப்பையும், கற்பிப்பவரையும் மறக்கலாமா? பிறகு இங்கு ஏன் மறந்து விடுகிறீர்கள். வீட்டிற்குச் சென்றவுடன் மறந்து விடுகின்றனர். இங்கு (அமர்ந்திருக்கும் போது) நிச்சயபுத்தியுடனிருக்கின்றனர். எவ்வளவு கண்ணீர் வடிக்கின்றனர்? இங்கிருந்து (மதுபன்) வீட்டிற்குச் (லௌகீக) சென்றவுடன் கடிதம் கூட எழுதுவதில்லை. மிக நெருங்கிய குழந்தைகள் வழிகாட்டியாகி (கூட்டிக் கொண்டு போவோர்) வருவோர் கூட மறந்து விடுகின்றனர். குறைந்த பட்சம் சேவை செய்தியை யாவது எழுதுங்களேன்! பாபா, நாங்கள் உங்களது சேவையிலேயே இருக்கிறோம். இல்லையெனில், மாயா சாகடித்து விட்டது என பாபா புரிந்து கொள்வார். உலக எஜமானராக்கும் பாபாவை நிரந்தரமாக நினைவு செய்ய வேண்டும் என்று புத்தியும் கூறுகிறது. ஆனால் குழந்தைகள் மாதக் கணக்கில்

கூட நினைவு செய்வ தில்லை. கடிதங்கள் எழுதுவதில்லை. மாயா ஒரு சிலரை முற்றிலும் மயக்கடித்து விடுகிறது. உயிரோடு வாழ்ந்து கொண்டே கடிதம் எழுதுவதில்லை, இறந்து விட்ட பிறகோ பேச்சுக்கே இடமில்லை. பாபாவும் நீங்கள் கடிதம் எழுதும் போதே அவரும் எழுதுவார். பாபாவை யார் நினைவு செய்வாரோ, அவர்களே கர்மாதீத் சதா ஆரோக்கியமாக, ஆவர். பாபாவின் ஆஸ்தி நிச்சயமாய் நினைவிற்கு வரவேண்டும். உறுதியான போதை ஏறவேண்டும். இச்சமயத்தில் குழந்தைகளாகிய உங்கள் நினைவால் வாய்க்கு இனிப்பு கிடைக்கிறது. சிருஷ்டியின் இராஜ்யம் என்னும் வெண்ணெய் நமக்கு கிடைக்கிறது. கிருஷ்ணரின் வாயில் வெண்ணெயைக் காண்பிக் கின்றனர், அதாவது உலகத்தின் இராஜ்யம் எஜமான தன்மையிலும், பல நிலைகள் உள்ளதல்லவா? யார் எவ்வளவு செய்வரோ அவ்வளவு அடைவர். நமக்கு பாபா கற்பிக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். பரம தந்தை என்று கூறப்படுகிறதல்லவா? ஆக தந்தையிடமிருந்து நிச்சயம் ஆஸ்தி கிடைக்கிறது. தாய் தந்தை வேண்டும், அப்போதே குழந்தைகள் பிறப்பர், அப்போதே ஆஸ்தியும் கிடைக்கும். தாயும் நீயே, தந்தையும் நீயே, நாங்கள் உங்கள் குழந்தைகள். உங்களது எளிய இராஜயோகம் கற்பதால் சொர்க்கத்தின் எஜமானர் ஆகிறோம். மூன்று சேனைகள் சரியாக முன்னேறுகின்றன என்று புரிய வைக்க வேண்டும். வினாச கால விபரீத புத்தி.... ஆதலால் முடிந்து விட்டனர். மற்றபடி, பகவானுடன் யாருக்கு அன்பு இருந்ததோ அவர்கள் மாலிக் (எஜமானர்) ஆகிவிட்டனர். நமது கடமை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். உங்களைச் சந்திக்கும் பெரும் பெரும் அதிகாரிகள் அவர்களிடமும் கையெழுத்து வாங்கலாம், மிகவும் சந்தோஷப்படுவார்கள். இது மிக நல்லதொரு காரியத்தைச் செய்கிறீர்கள், முயற்சி செய்யுங்கள். இதற்கு நேரம் வேண்டும், பிறகு பராமரிக்க வேண்டும். சேவையை அதிகரிப்பதற்கு பல வழிகள் உள்ளன. ஆனால் குழந்தைகளிடம் அவ்வப்போது அகங்காரம் வந்து விடுகிறது, அல்லது குறிப்பிட்ட ஒருவரின் நெருக்கத்தில் வந்து விடுவதால் மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது. ஞான போதையில் முகம் சதா மலர்ச்சியுடன் இருக்க வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தை பாப்தாதாவின் அன்பும், நினைவும் காலை வணக்கமும் உரித்தாகுக. ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் வணக்கம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. நோக்கம்-லட்சியத்தை முன் வைத்து புருஷார்த்தம் செய்ய வேண்டும். தெய்வீக நற்பழக்கங்களை தாரணை செய்ய வேண்டும். ஒரு காதில் கேட்டு இன்னொரு காது வழியாக வெளியேற்றிவிட வேண்டாம்.

2. உலக படைப்பாளர் பாபா நமக்கு கற்பிக்கிறார். நாம் அவரது மாணாக்கர்கள். இந்த போதையிலிருக்க வேண்டும். சேவைக்கான விதவிதமான வழிகளைக் கண்டு அதிலேயே மூழ்கி விட வேண்டும்.

வரதானம் : பாபாவிடமிருந்து பெறப்பட்ட பொக்கிஷங்களை சிந்தனை செய்து தன்னுடையதாக மாற்றக்கூடிய சதா புன்முறுவலுடனும், சதா கவலையற்றவர் ஆகுக.

குழந்தைகளாகிய உங்களுக்கு சிந்தனை செய்து மற்றும் யோசிப்பது

போன்ற சித்திரங்கள் பக்தி மார்க்கத்தில் விஷ்ணுவிற்கு காட்டப்பட்டிருக்கிறது. பாம்புகளை குடையாக மாற்றியிருக்கிறார். அதாவது அடிமையாக ஆகி விட்டது. மாயாவிடம் தோல்வியடைவதற்கான, யுத்தம் புரிவதற் கான எந்தவித கவலையும் இல்லை, சதா மாயாஜீத் அதாவது கவலையற்றவராக இருப்பது. தினந்தோறும் ஞானத்தின் புதுப்புது ஞான கருத்துகளை நினைவில் வைத்து சிந்தனை செய்தீர்கள் என்றால் மிகவும் மஜா (ஆன்ந்தம்) வரும். சதா புன்முறுவலுடன் இருப்பீர்கள், ஏனெனில் பாபாவிடமிருந்து பெறப்பட்ட பொக்கிஷங்களை சிந்தனை செய்வதினால் தனக்கு அனுபவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

சுலோகன்: யாருக்குள் பழிவாங்க கூடாது, மாறி காட்ட வேண்டும் என்ற சுபபாவனை (நல்ல உணர்வு) இருக்கிறதோ, அவர்கள் தான் தன்னை மாற்றம் செய்துக் கொள்பவர்.